**ஜனவரி – 20**

# TNPSC துளிகள்

- தொழில்துறை அமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு மாநிலத்தின் பிரதிநிதிகள் குழுவானது, சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளது.
- திரிபுராவில் உள்ள ட்விப்ரா மாணவர் கூட்டமைப்பு (TSF) ஆனது, கோக்போரோக் என்ற மொழிக்கு ரோமானிய எழுத்து வடிவங்களை ஏற்கக் கோரி போராட்டத்தை நடத்தி உள்ளது.
- இந்தியாவின் முன்னணி வாகன கண்காட்சி நிகழ்வான பாரத் மொபிலிட்டி குளோபல் எக்ஸ்போ 2025 ஆனது புது டெல்லியில் நடைபெற்று வருகிறது.
- மத்திய அரசானது, சமீபத்தில் இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தில் உள்ள ஷிகாரி தேவி வனவிலங்குச் சரணாலயத்தைச் சுற்றி சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலங்களை (ESZ) நிறுவியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் M. ராஜேஷ்வர் ராவ், முன்னதாக டாக்டர் பத்ராவால் தலைமை தாங்கிய பணவியல் கொள்கைத் துறையின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## கோனோகார்பஸ் மரங்களை நடுதல்




- தமிழ்நாடு அரசு ஆனது, அயல்நாட்டு மர இனமான கோனோகார்பஸ் மரங்களை நடுவதையும் அவற்றை விற்பனை செய்வதையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு புதிய ஆலோசனை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- மிகவும் வேகமான வளர்ச்சி மற்றும் மிகப் பசுமையான இலைகளுக்குப் பெயர் பெற்ற கோனோகார்பஸ், சாலையோரங்கள், சாலைகளின் மையத் தடுப்பு பகுதிகள் மற்றும் பொது தோட்டங்களில் பசுமையாக்க முன்னெடுப்புகளில் நடுவதற்கான பிரபலமான தேர்வாக இருந்து வருகிறது.
- பல்வேறு மண் மற்றும் பருவநிலை சூழல்களில் செழித்து வளரும் திறன் கொண்ட இந்த மரமானது நகர்ப்புற மேம்பாட்டிற்கு ஏற்ற ஒரு பெரும் அலங்கார வளர்ப்பு மரமாக அமைகிறது.

- இந்த மரத்தின் மகரந்தப் பரவல் தொடர்பான பல நோய்ப் பாதிப்புகள் மிக அடிக்கடி பதிவாகியுள்ளன.
- தற்போது, பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலில் அதன் மிக மோசமான தாக்கம் குறித்த அச்சுறுத்தல் ஆனது அதன் பயன்பாடு குறித்து மறுபரிசீலனை செய்ய வழி வகுத்தன.

# தேசியச் செய்திகள்

## 106வது சட்டத் திருத்தம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- 106வது திருத்தச் சட்டத்தின் விதிகளை எதிர்த்து 2023 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- இந்தச் சட்டமானது மக்களவை, மாநிலச் சட்டமன்றம் மற்றும் டெல்லி சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீட்டை வழங்குகிறது.
- இதில் அடிப்படை உரிமைகளை குறிப்பாக சரத்து 14வது சரத்தின் கீழ் கொடுக்கப் பட்டுள்ள உரிமைகளை மீறுவது என்ற கேள்விக்கே இடமில்லை, எனவே, இதற்கு 32வது சரத்தின் அதிகார வரம்பு பொருந்தாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## டொனால்ட் டிரம்பிற்குத் தண்டனை விதிப்பு

- அமெரிக்க நீதிமன்றமானது ஒரு ரகசிய பண வைப்பு வழக்கில் டொனால்ட் டிரம்ப்பின் தண்டனையை உறுதி செய்ததையடுத்து, வெள்ளை மாளிகையில் பதவி வகிக்கும் முதல் குற்றவாளியாக மாறியுள்ளார்.
- அவருக்கு 'நிபந்தனையற்ற விடுதலை' என்ற தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் அவர் மீதான குற்றச்சாட்டுகளில் குற்றவாளி

எனக் கண்டறியப்பட்டாலும், அவர் அமெரிக்காவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால் எந்த சிறைத்தண்டனையும் அல்லது தண்டனையையும் அவர் எதிர்கொள்ள மாட்டார்.




## அமெரிக்க நிறுவனப் பட்டியல் புதுப்பிப்பு 2025





- அமெரிக்க வணிகத் துறையின் தொழில்துறை மற்றும் பாதுகாப்பு வாரியம் (BIS) ஆனது தேசியப் பாதுகாப்பு தொடர்பான அதன் கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனப் பட்டியலில் 11 நிறுவனங்களைச் சேர்த்துள்ளது.
- கூடுதலாக, BIS ஆனது இந்தியன் ரேர் எர்த்ஸ், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் (IGCAR), மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) ஆகிய மூன்று இந்திய நிறுவனங்களை நிறுவனப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- அமெரிக்க தேசியப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தும் நடத்தையை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தக் கூடிய ஒரு சக்திவாய்ந்த செயற் கருவியாக இந்த நிறுவனப் பட்டியல் உள்ளது.

## கம்பாலா பிரகடனம் 2025

- மிக விரிவான ஆப்பிரிக்க வேளாண் மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு (CAADP) ஆனது உகாண்டாவின் கம்பாலா என்னுமிடத்தில் நிறைவு அடைந்தது.

- இந்த மாநாடானது 2026 முதல் 2035 ஆம் ஆண்டு வரையிலான ஆப்பிரிக்காவின் வேளாண்-உணவு அமைப்புகளுக்கான ஒரு மாறுதல் மிக்க கம்பாலா பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்தப் புதிய பிரகடனம் ஆனது, இந்த ஆண்டில் அமலாக்கக் காலம் முடிவடைகின்ற மலாபோ பிரகடனத்தின் வழி உருவாக்கப்பட்ட ஒரு பிரகடனமாகும்.
- இந்த உச்சி மாநாட்டின் போது, ஆப்பிரிக்கத் தலைவர்கள் புரட்சிகரமான பத்து ஆண்டு CAADP செயல் திட்டத்தையும் (2026–2035) அங்கீகரித்தனர்.
- 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மொசாம்பிக் நாட்டின் மபுடோ என்னுமிடத்தில் நடத்தப் பெற்ற ஆப்பிரிக்க ஒன்றியச் சட்டமன்றத்தின் இரண்டாவது அமர்வின் போது CAADP அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இந்த அமர்வில், வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த மபுடோ பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- ஆப்பிரிக்க ஒன்றிய உறுப்பினர் நாடுகள் தங்கள் தேசிய நிதி ஒதுக்கீட்டில் குறைந்தது 10 சதவீதத்தை வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கு என்று ஒதுக்கீடு செய்வதற்கும், ஆண்டுதோறும் சுமார் 6 சதவீத வேளாண் உற்பத்தி வளர்ச்சியை அடைவதற்காக ஒதுக்கீடு செய்வதற்கும் இது வலியுறுத்துகிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## விண்வெளியில் காராமணி செடிகள்

- இஸ்ரோ நிறுவனமானது, விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஒரு ஆய்வுகளுக்கான அதன் குறு ஆராய்ச்சி மாதிரியினைப் பயன்படுத்தி விண்வெளியில் காராமணி (லோபியா) விதைகளை வெற்றிகரமாக முளைக்கச் செய்துள்ளது.
- செவ்வாய் மற்றும் நிலவு போன்ற வானியல் அமைப்புகளில் குடியேறுவதற்காக என மனிதர்கள் மிக நீண்ட விண்வெளி பயணங்களில் ஈடுபடும் போது, விண்வெளியில் வளர்க்கப் படும் தாவரங்கள் அவர்களுக்கு ஒரு மிக நிலையான உணவு ஆதாரத்தை வழங்க முடியும்.
- தாவரங்கள் ஒளிச் சேர்க்கையின் போது ஆக்ஸிஜனை வெளியிடுவதால், அவற்றை விண்வெளியில் வளர்ப்பதன் மூலம் விண்கலத்தில் காற்றைச் சுவாசிக்க உதவும்.
- ஆனால், ஈர்ப்பு விசையின்மை தாவரங்களின் வேர்கள் கீழ் நோக்கி வளர்வதைத் தடுப்பதால், ஊட்டச்சத்துப் பரவலை ஒரு கடினமான செயலாக மாற்றுகிறது.
- நீர் ஆனது நுண் ஈர்ப்பு விசையில் அது தொடும் எந்த மேற்பரப்பிலும் ஒட்டிக்

கொண்டிருப்பதால், ஒரு தாவரத்தின் அடிப் பகுதியில் தெளிக்கும் போது, அது அதன் வேர்களுக்கு கீழே சென்று சேர்வதில்லை.

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளித் தோட்டம் ஆனது, 'Veggie' அல்லது காய்கறி உற்பத்தி அமைப்பு என்று அழைக்கப் படுகிறது என்ற ஒரு நிலையில் இது சராசரியாக தினசரிப் பயன்பாட்டுப் பையின் அளவிலானதாகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## DDT - மாசுபட்ட மண் மீட்சி




- DDT அல்லது டை-குளோரோ-டை-ஃபீனைல்-ட்ரை-குளோரோ-ஈத்தேன் ஆனது 1939 ஆம் ஆண்டில் ஒரு பூச்சிக்கொல்லியாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது மிகப் பரந்த அளவிலான பூச்சிகளுக்கு எதிராக சிறந்த செயல்திறனைக் கொண்டு உள்ளது, ஆனால் அதன் நீண்டகாலப் பயன்பாட்டிற்குப் பிறகு இது அம்மண்ணைச் சிதைத்து, அதை வளமிழக்கச் செய்கிறது.

- அந்த வளமிழப்புகளை மீளச் செய்வதற்கு என, DDT-மாசுபட்ட மண்ணினை, உயிரியக் கரிமத்துடன் கலக்கும் போது, அது மீண்டும் வளத்தைப் பெற முனைகிறது என்பதை சுவீடன் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பண்புகளில் நிலக்கரியைப் போன்ற இந்த உயிரியக் கரிமம் ஆனது தனது உற்பத்திச் செலவினம் குறைந்தது என்பதால் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்பு ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்ட அறிக்கை 2025

**Figure 1.2. Change in labour force participation rates between 2014 and 2019 and between 2019 and 2024, by sex and age group, high-income countries** (percentage points)

| | Both sexes | | Women | | Men | |
|---|---|---|---|---|---|---|
| | 2014–19 | 2019–24 | 2014–19 | 2019–24 | 2014–19 | 2019–24 |
| Total (15+ years) | 0.8 | 0.1 | 1.3 | 0.6 | 0.3 | −0.6 |
| Youth (15–24 years) | 1.1 | 1.0 | 1.4 | 1.2 | 0.9 | 0.9 |
| Prime age (25–54 years) | 1.1 | 1.1 | 2.0 | 2.1 | 0.4 | 0.1 |
| Older (55–64 years) | 4.4 | 2.8 | 5.1 | 3.6 | 3.6 | 1.9 |
| 65 years and older | 1.9 | 0.4 | 1.7 | 0.5 | 2.1 | 0.2 |
| *Demographic shift* | *−1.0* | *−1.6* | *−1.6* | *−2.4* | *−0.7* | *−1.1* |

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (ILO) ஜெனீவாவில் உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2025 என்ற அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய வேலைவாய்ப்பு ஆனது தொழிலாளர் வளத்திற்கு ஏற்ப வளர்ச்சியடைந்ததாகவும், அது வேலைவாய்ப்பின்மை விகிதத்தினைச் சுமார் 5 சதவீதத்திலேயே நிலையாக வைத்திருந்ததாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- இருப்பினும், இளையோர் வேலைவாய்ப்பின்மை விகிதம் சுமார் 12.6% ஆக அதிகமாக இருந்ததால் சிறிதளவு முன்னேற்றமே பதிவாகியுள்ளது.
- பொருளாதார வளர்ச்சியானது, 2024 ஆம் ஆண்டில் 3.2% ஆக இருந்தது, இது 2023 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் முறையே 3.3 மற்றும் 3.6% ஆக இருந்தது.
- வேலை செய்ய விரும்பும் ஆனால் வேலைவாய்ப்பு இல்லாதவர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 402 மில்லியனை எட்டியது.
- இதில் 186 மில்லியன் வேலைவாய்ப்பற்றோர், 137 மில்லியன் தற்காலிகமாக வேலை செய்ய முடியாதவர்கள் மற்றும் வேலை தேடுவதை நிறுத்திய 79 மில்லியன் ஊக்கம் இழந்தத் தொழிலாளர்கள் அடங்குவர்.
- கல்வி, வேலைவாய்ப்பு அல்லது அதன் பயிற்சியில் (NEET) இல்லாத இளையோர்களின் விகிதங்கள் அதிகரித்துள்ளன.
- மிக குறைவான வருமானம் கொண்ட நாடுகளில், இளையோர்களின் NEET விகிதங்கள் பெருந்தொற்றிற்கு முந்தைய நிலைகளை விட 4 சதவீத புள்ளிகள் அதிகரித்துள்ளன.
- இந்த ஒரு நிலையானது 2024 ஆம் ஆண்டில் 15.8 மில்லியன் இளைஞர்களையும் 28.2 மில்லியன் இளம் பெண்களையும் பாதித்தது.

## QS அமைப்பின் உலக எதிர்காலத் திறன்கள் குறியீடு 2025

- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பசுமை நுட்பம் சார்ந்தத் திறன்கள் உள்ளிட்ட

எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கான தயார்நிலையின் அடிப்படையில் அமெரிக்க நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

❖ கல்வி திறன்கள் மற்றும் முதலாளிகளின் தேவைகளுக்கு இடையிலான ஒருங்கமைவு, கல்வியியல் தயார்நிலை மற்றும் பொருளாதார மாற்றம் போன்ற சில ஒட்டுமொத்த குறிகாட்டிகள் அடைப்படையில் உலகளவில் இந்தியா 25வது இடத்தைப் பிடித்தது.

❖ இந்த அறிக்கையின்படி இந்தியாவின் ஒட்டுமொத்தத் தரவரிசையானது, அதை "எதிர் கால திறன்களில் போட்டித்தன்மை மிக்கது" என்ற நிலையில் வைக்கிறது.

❖ இதில் முதல் பத்து இடங்களில் உள்ள அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகள் "எதிர்கால திறனில் முன்னோடியான நாடுகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

❖ இந்த அறிக்கையில் 'வேலை வாய்ப்பின் எதிர்காலம்' என்ற குறிகாட்டியில் இந்தியா இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது.

| Skills Fit | | Academic Readiness | | Future of Work | | Economic Transformation | |
|---|---|---|---|---|---|---|---|
| Country | Score | Country | Score | Country | Score | Country | Score |
| UK | 100.00 | UK | 100.0 | United States | 100.0 | South Korea | 100.0 |
| US | 94.4 | Germany | 99.6 | India | 99.1 | Israel | 98.9 |
| Canada | 90.9 | Netherlands | 99.3 | Mexico | 98.2 | United States | 97.9 |
| Germany | 89.2 | Australia | 98.9 | Canada | 97.4 | Switzerland | 96.8 |
| Netherlands | 88.6 | United States | 98.6 | Australia | 96.5 | Japan | 95.8 |

**INDIA**

| Indicator | Skills Fit | Academic Readiness | Future of Work | Economic Transformation | Overall |
|---|---|---|---|---|---|
| Score | 59.1 | 89.9 | 99.1 | 58.3 | 76.6 |
| Global position | 37th | 26th | 2nd | 40th | 25th |

# மாநிலச் செய்திகள்

## கேரளாவின் MMR நிலை

❖ தற்போது நாட்டிலேயே மிகக் குறைவாக, ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 19 ஆக இருக்கும் கேரளாவின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் ஆனது தற்போது சீராக உயர்ந்து வருகிறது.

❖ ஆண்டுதோறும் மிகச் சராசரியாக 5-5.5 லட்சம் பிறப்புகள் பதிவான மாநிலம் ஆனது, தற்போது முன் எப்போதும் இல்லாத அளவிற்கு குறைவாக 3,93,231 பிறப்புகளை எட்டி உள்ளது.


❖ இந்த மாநிலம் 2020-21 ஆகிய காலக் கட்டத்தினைத் தவிர, பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதத்தில் மிகவும் தொடர்ந்து உறுதியான நிலையினைத் தக்க வைத்து வருகிறது.

❖ புள்ளிவிவர வரைபடத்தில், 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து பதிவான சராசரி 5.5 லட்சம் வருடாந்திரப் பிறப்புகளிலிருந்து, 4,96,262 பிறப்புகள் பதிவு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்த எண்ணிக்கை ஆனது ஐந்து லட்சத்திற்குக் கீழே சென்றது.

❖ 2018 ஆம் ஆண்டு முதல், இந்த எண்ணிக்கையானது சீராகக் குறைந்து வருகிறது என்ற

ஒரு நிலையில் இது மீண்டும் ஐந்து லட்சத்திற்கு மேல் அதிகரிக்கவில்லை.

❖ கடைசியாக வெளியிடப்பட்ட VSR (2021) அறிக்கையில் கேரளாவில் மொத்தப் பிறப்பு எண்ணிக்கை 4,19,767 ஆக பதிவாகியுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய விளையாட்டு விருதுகள் 2025




❖ மனு பாக்கர், D.குகேஷ், ஹர்மன்பிரீத் சிங் மற்றும் பிரவீன் குமார் ஆகியோர் தங்கள் கேல் ரத்னா விருதுகளைப் பெற்றனர்.

❖ மேலும் குடியரசுத் தலைவர் மாளிகையில் 32 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.

❖ அர்ஜுனா விருதைப் பெற்ற விளையாட்டு வீரர்களில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற சரப் ஜோத் சிங் மற்றும் ஸ்வப்னில் குசலே ஆகியோரும் அடங்குவர்.

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் முதல் முறையாக தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் முரளிகாந்த் இராஜாராம் பெட்கரருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

❖ சண்டிகர் பல்கலைக் கழகம், லவ்லி புரொஃபஷனல் பல்கலைக் கழகம் மற்றும் குரு நானக் தேவ் பல்கலைக் கழகத்திற்கு மௌலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பை வழங்கப் பட்டது.

- 80 வயதான போர் வீரரும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவருமான முரளிகாந்த் பெட்கர், வாழ்நாள் சாதனையாளருக்கு ஆன அர்ஜுனா விருதைப் பெற்றார்.
- விளையாட்டுகளை நன்கு ஊக்குவிப்பதற்காக இந்திய உடற்கல்வி அறக்கட்டளைக்கு இராஷ்ட்ரிய கேல் புரோட்சஹான் புரஸ்கார் வழங்கப்பட்டது.
- தீபாலி தேஷ்பாண்டே (துப்பாக்கி சுடுதல் பயிற்சியாளர்) மற்றும் அர்மாண்டோ அக்னெலோ கோலாகோ (கால்பந்து) ஆகியோர் துரோணாச்சார்யா என்ற விருதைப் பெற்றனர்.

# முக்கிய தினங்கள்

## தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் தினம் - ஜனவரி 16

- இது துடிப்பு மிகு புத்தொழில் நிறுவனங்கள் சூழலை அங்கீகரித்து ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இத்தினமானது இந்தியாவில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்டமாகும்.
- பொருளாதார வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தினை நன்கு அதிகரிப்பதற்காக தொழில்முனைவுச் சிந்தனையினைக் குறிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி நிலவரப்படி தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையினால் (DPIIT) 1.59 லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்தியா உலகின் மூன்றாவது பெரிய புத்தொழில் நிறுவனங்கள் சூழலைக் கொண்டு உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★